# நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!






நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல், நிவாரணமும் அளிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து 'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி'களின் சார்பில் தஞ்சாவூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில விவசாய அணி செயலாளரும், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன் தலைமை வகித்தார், இதில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தி.பழநிவேல், க.வைரமணி, மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., ச.முரசொலி எம்.பி, முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், எம்.ராமச்சந்திரன், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், சண்.இராமநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

## தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, நவ. 24-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:-

கழக தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு அரசு நிகழ்ச்சி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள 25.11.2025 செவ்வாய்க்கிழமை 26.11.2025 புதன்கிழமை அன்று வருகை தரவுள்ளார். அந்நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறவுள்ளது.



எனவே இந்நிகழ்ச்சியில் ஈரோடு ஒருங்கிணைந்த மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழகம் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLC, BDA, BLC மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

25.11.2025 மாலை 5.30 மணிக்கு விஜயமங்கலம் டோல்கேட்டில் வரவேற்பு

25.11.2025 மாலை 6.00 மணிக்கு பெருந்துறையில் வரவேற்பு

25.11.2025 மாலை 6.30 மணிக்கு மேட்டுக்கடையில் வரவேற்பு

25.11.2025 மாலை 7.00 மணிக்கு காளிங்கராயன் இல்லத்தில் இரவு தங்குதல்

26.11.2025 காலை 9.00 மணிக்கு திண்டலில் வரவேற்பு

26.11.2025 காலை 9.15 மணிக்கு முள்ளாம்பரப்பில் வரவேற்பு

26.11.2025 காலை 9.30 மணிக்கு அவல்பூந்துறையில் வரவேற்பு

26.11.2025 காலை 9.45 மணிக்கு ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் சிலை மற்றும் மணிமண்டபம் திறப்புவிழா

26.11.2025 காலை 10.30 மணிக்கு ஓடாநிலையில் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினை விடத்தில் மரியாதை செய்தல் 26.11.2025 காலை 11.30 மணிக்கு சோலார் ரவுண்டானா வில் வரவேற்பு

26.11.2025 காலை 11.45 மணிக்கு சோலாரில் சோலார் பேருந்து நிலையத்தில் (அரசு நிகழ்ச்சி) 26.11.2025 மதியம் 1.00 மணிக்கு ஈரோடு காளிங்கராயன் இல்லத்தில் மதிய உணவு 26.11.2025 மாலை 5.00 மணிக்கு சித்தோடு ஆவின் பால் பண்ணையில் திரு எஸ்.கே.பரசிவன் அவர்களின் சிலை திறப்பு விழா

26.11.2025 மாலை 6.00 மணிக்கு சித்தோடு கொங்கு மாளிகையில் திருமண வரவேற்பு 26.11.2025 மாலை 6.15 மணிக்கு கோவை விமான நிலையம் புறப்படுகிறார்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி கூறியுள்ளார்.



கவிஞர் ஈரோடு தமிழன்பன் அ உடல் நலக் குறைவினால் இயற்கை எய்தியதையொட்டி, கோயம்பேட்டில் உள்ள இல்லத்திற்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.11.2025) நேரில் சென்று அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

## விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய ப.ஜ.க. அரசைக் கண்டித்து - இன்று

# திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர், நவ. 24 –

தமிழ்நாட்டு விவசாயிகளை அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க.. அரசினைக் கண்டித்து திருவாரூரில் இன்று (24.11.2025 – திங்கள்கிழமை) நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்து மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

இந்தியா துணைக்கண் டமே வியந்து பாராட்டும்படி ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவண்ணம் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தும் திராவிட நாயகர் – முதல்வர் அவர்களின் நல் லாட்சியில் தீட்டப்பட்டு மக்களுக்கு தரப்படும் நல திட்டங்களை, பி.ஜே.பி. உள்ளிட்ட ஆட்சியாளர்களும் கூட தங்களது மாநிலங்களிலும் அமல்படுத்தும் கழகத்தின் பொற்கால ஆட்சியில், வேளாண் நலத்திட்டங் களாலும், உரிய நேரத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டது முறையான தூர்வாரும் பணிகள் நடைபெற்று,



விவசாய மேம் பாட்டு ஆலோசனைகளாலும் தமிழ்நாட்டில் முன் எப்போதும் இல்லாத வகையில் நெல் உற்பத்தி பன்மடங்கு உயர்ந்து இந்த ஆண்டு சாதனை படைத்துள்ளது.

இதனால் விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் விவசாய ஆர்வலர்களும், பொதுமக்களும் மகிழ்ச்சியில் இருந்தனர். இதனை பொறுத்துக் கொள்ள முடியாத மோடி தலைமையிலான ஒன்றிய பி.ஜே.பி. அரசு தமிழ்நாட்டிற்கு பல்வேறு வகையில் நெருக்கடிகளை கொடுத்து ஜனநாயக விரோத அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டது. அதனை தனது மக்கள் ஆதரவுடன் தனது உயரிய செயல்பாடுகளால் முறியடித்து தமிழ்நாட்டை வளர்ச்சிப்பதையில் முதல்வர் தளபதி அவர்கள் கொண்டு செல்கிறார்.

தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி பன்மடங்கு அதிகமான நிலையில் வடகிழக்கு பருவமழையின் தாக்கத்தால் ஈரப்பதம் அடைந்து நெல் கொள்முதல் நிலையங் களுக்கு கொண்டு வரப்படுகிறது. இதனால் விவசாயி களின் நெல் கொள்முதலில் பாதிப்பு அடைய கூடாது என்கிற நல்லெண்ணத்தோடு ஈரப்பத கட்டுப்பாடுகளை கைகளில் வைத்திருக்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசிடம் கொள்முதல் ஈரப்பதத்தை 22 சதவீதமாக உயர்த்தி தரும்படி தளபதி அவர்களின் தலைமையிலான கழக அரசு கோரிக்கை வைத்தது.

ஆனால் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியை வீழ்த்த முடியவில்லை என்பதால் விவசாயிகளுக்கு துரோகம் செய்யும் நோக்கத்தோடு நெல் ஈரப்பதத்தை உயர்த்த ஒன்றிய பி.ஜே.பி. அரசு மறுப்பதோடு, விவசாயிகளுக்கு தரவேண்டிய மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான இழப்பீட்டு தொகையையும் தராமல் வஞ்சித்து வருகிறது.

முதல்வர், திராவிட நாயகர், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுத்தல்களின் படி ஒன்றிய பி.ஜே.பி. அரசின் இந்த மக்கள் விரோத, விவசாய விரோத செயல்பாடு களைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் திருவாரூரில் இன்று (24.11.2025 – திங்கள் கிழமை) காலை 10 மணியளவில் திருவாரூர் ரயில் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் விவசாய ஆர்வலர்களும், கழக நிர்வாகிகளும், கழகத் தோழர்களும், பொதுமக்களும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழர்களும் பெருமளவில் பங்கேற்று ஒன்றிய பி.ஜே.பி. அரசின் விவசாய விரோத கொள்கைகளுக்கு எதிராக குரல்கொடுப்போம் என அழைக்கிறேன்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சேலம் முன்னாள் மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வீரபாண்டி ஆறுமுகத்தின் 13–ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி பூலாவரியில் உள்ள அவரின் நினைவிடத்தில் சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் டாக்டர். ஏ.கே.தருண், கிழக்கு மாவட்ட துணைச்செயலாளர்கள் கே.சுரேஷ்குமார், கு.சின்னதுரை, கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டாக்டர் பிரபு, மாவட்ட கைத்தறி நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், அவை தலைவர் மு.ரா. கருணாநிதி. வீரபாண்டி ஒன்றிய செயலாளர் வெண்ணிலா சேகர், மேட்டூர் ப.கோபால், வீரபாண்டி ஆறுமுகம் மகள்கள் மகேஸ்வரி, நிர்மலா, பேத்தி. மலர்விழி ராஜா உட்பட கழக நிர்வாகிகள் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.